இதழ்-94

01.04.2026

# துமி

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 இணையப் புனைவுகளால் உருவாகும் பேராபத்துக்கள்
07 காகிதத்தில் அல்ல கல்லிலே பதித்திட்டோம் கண்டீர்
12 இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நினைவுப் பேருரை சிறப்பாக நடைபெற்றது
15 இளம் மனங்களின் மௌனப் போராட்டம்
20 ஐம்பெருங்காப்பியங்கள் சூடிய தமிழ்த்தாய்
22 பல்கலைக்கழக கல்வி: இலவசம் எனப்படும் விலை உயர்ந்த கனவு
28 இணையம்: மானுட உறவுகளின் பாலமா அல்லது விரிசலா?
31 ஆரம்பமாகிறது ஜபிளல் திருவிழா



வாசகர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஆசிரியர் பதிவு

# இணையப் புனைவுகளால் உருவாகும் பேராபத்துக்கள்

இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களின் அபரிமிதமான வளர்ச்சி மனிதத் தொடர்புகளை எளிதாக்கியுள்ள அதே வேளையில், பொறுப்பற்ற தகவல் பகிர்வு என்பது ஒரு பெரும் சமூக அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இன்று ஒரு செய்தியின் உண்மைத் தன்மையைச் சற்றும் ஆராயாமல், சுயலாபத்திற்காகவும் பரப்பரப்பிற்காகவும் கற்பனையான கதைகளை உருவாக்கி அதனைப் பொதுவெளியில் பகிரும் போக்கு அதிகரித்து வருகின்றது. இத்தகையச் செயல்கள் வெறும் எழுத்துக்களுடன் நின்றுவிடாமல், தனிமனிதர்களின் அந்தரங்கம், குடும்ப அமைதி மற்றும் சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றின் மீது மிக மோசமானத் தாக்குதல்களைத் தொடுக்கின்றன.



ஒரு பொய்யானச் செய்தி காட்டுத்தீயைப் போலப் பரவும்போது, அதன் பின்னணியில் உள்ள உண்மை மறைக்கப்பட்டு விடுகிறது. இது பல குடும்பங்களில் தீர்க்க முடியாத மனக்கசப்புகளையும், பிரிவினைகளையும், தற்கொலை போன்ற விபரீத முடிவுகளையும் நோக்கி இட்டுச் செல்கிறது. குறிப்பாக, பெண்களையும் குழந்தைகளையும் இலக்காகக் கொண்டு பரப்பப்படும் அவதூறுகள், அவர்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ முடியாதச் சூழலை உருவாக்குகின்றன. டிஜிட்டல் உலகில் ஒருமுறை பதியப்படும் ஒரு தவறானத் தகவல், காலங்கள் கடந்தாலும் அழியாமல் இருப்பது பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ச்சியான மன உளைச்சலைத் தருகிறது.

மறுபுறம், சமூகத்தின் நலனுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, பல நற்பணிகளை ஆற்றி வரும் சமூகப் பெரியார்கள் மற்றும் தன்னார்வலர்களைப் பற்றிய அவதூறுகள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. மதிப்போடு இருப்பவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதன் மூலம், அவர்கள் செய்யும் நற்பணிகளை முடக்கச் சில சக்திகள் முயல்கின்றன. ஒரு மனிதன் பல ஆண்டுகாலமாகச் சேர்த்தப் புகழும் கௌரவமும், ஒரு சில நிமிடங்களில் பகிரப்படும் ஆதாரமற்ற வதந்தியால் சிதைக்கப்படுகிறது. இத்தகையப் போக்கு தனிப்பட்ட நபரை மட்டும் பாதிப்பதில்லை மாறாக, ஒட்டுமொத்த சமூக முன்னேற்றத்தையும் முடக்கிப் போடுகிறது.

“நல்ல காரியம் செய்தாலும் நமக்கும் இத்தகைய அவதூறு நேரிடுமோ“ என்ற அச்சம் இன்று பலரிடையே ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தின் காரணமாகச் சமூகப் பணிகளில் ஆர்வம் உள்ளவர்கள் கூடத் தங்களை அப்புறப்படுத்திக் கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது. இது வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறது. சமூகத்திற்கு உதவ முன்வருபவர்கள் மதிக்கப்பட வேண்டிய இடத்தில், மலிவான விமர்சனங்களுக்கும் வதந்திகளுக்கும் உள்ளாக்கப்படுவது ஒரு ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளம் அல்ல.

இத்தகைய வதந்திகள் பரவுவதற்குப் பின்னால் இருக்கும் உளவியல் மற்றும் தொழில்நுட்பக் காரணிகளை நாம் ஆழமாக நோக்க வேண்டும். சமூக வலைத்தளங்களில் கிடைக்கும் “லைக்“கள் மற்றும் “பகிர்வு“கள் மூலம் கிடைக்கும் தற்காலிகப் பிரபல்யத்திற்காகப் பலர் உண்மையைச் சிதைக்கத் துணிகின்றனர்.



ஒரு செய்தியைப் பகிரும் முன் அது உண்மையா, இதனால் யாருடைய வாழ்க்கை பாதிக்கப்படும் என்ற அறச் சிந்தனை பலரிடம் இருப்பதில்லை. இணையத்தில் உலவும் "கிளிக் பெய்ட்" (Clickbait) கலாச்சாரம், பரபரப்பானத் தலைப்புகளைக் கொண்டு மக்களை ஈர்க்க முயல்கிறது. இதில் சிக்கிப் பல குடும்பங்களின் மானமும் மரியாதையும் ஏலத்திற்கு வருகின்றன.

சமூகப் பணியாளர்களைத் தாக்கும் வதந்திகள் பெரும்பாலும் பொறாமை அல்லது காழ்ப்புணர்ச்சி காரணமாகவே உருவாக்கப்படுகின்றன. பொது வாழ்வில் நேர்மையாக இருப்பவர்களைக் கறைப்படுத்துவதன் மூலம், அவர்களுடைய நற்பணிகளால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தடுக்க முடியும் என எதிர்ப்பாளர்கள் கருதுகின்றனர். இது சமூகத்தின் மனசாட்சியை மழுங்கடிக்கும் செயலாகும்.

பாதிப்புகளைப் பொறுத்தவரை, இது ஒரு தொடர் சங்கிலி வினையைப் போன்றது. குடும்ப ரீதியாகப் பார்க்கும்போது, கணவன்-மனைவிக்கிடையிலான விவாகரத்துகள், பிள்ளைகளின் கல்வி பாதிப்பு மற்றும் சமூகப் புறக்கணிப்பு போன்றவை முதன்மையானவை. வதந்தியால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

சமூக ரீதியாகப் பார்க்கும்போது, அறக்கட்டளைகள், பொதுத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர் சமூகச் சேவகர்கள் மீதான நம்பிக்கை குறைகிறது. இதனால் ஏழை எளிய மக்களுக்குச் சென்றடைய வேண்டிய உதவிகள் தடைபடுகின்றன. வதந்திகளுக்கு அஞ்சிப் பொதுநலப் பணிகளிலிருந்து நல்லவர்கள் ஒதுங்கிக் கொள்ளும்போது, அந்த இடத்தைச் சுயநலவாதிகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். இது சமூகத்தில் ஊழலையும் அநீதியையும் வளர்க்கவே வழிவகுக்கும்.இந்தச் சமூகப் பிணியைத் தடுக்க வேண்டியப் பொறுப்பு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஊடகங்களுக்கும் உண்டு.

ஒரு தகவலைப் பெறும்போது அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வரை அதைப் பகிராமல் இருப்பதே சிறந்த அறமாகும். சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஒருபுறம் இருந்தாலும், தனிமனித ஒழுக்கமும் சமூகப் பொறுப்புணர்வுமே நிரந்தரத் தீர்வைத் தரும். சமூக வலைத்தளங்களை மற்றவர்களை இழிவுபடுத்தும் ஆயுதமாகப் பயன்படுத்தாமல், ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கானக் கருவியாக மாற்ற வேண்டும். அவதூறுகளைப் பரப்புபவர்களைச் சமூகம் அடையாளம் கண்டு புறக்கணிக்க வேண்டும்.

அதேபோல், வதந்திகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தார்மீக ஆதரவை வழங்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும். குறிப்பாக, நற்பணிகள் செய்பவர்களைப் பாதுகாக்க வேண்டியது அந்தச் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு. அப்போதுதான் எவ்வித அச்சமுமின்றி மக்கள் பொதுப் பணிகளில் ஈடுபட முன்வருவார்கள். உண்மையை ஆராயும் பண்பும், பிறர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் மனப்பக்குவமும் வளரும்போது மட்டுமே, இத்தகைய இணையவழி வன்கொடுமைகளிலிருந்து நமது சமூகத்தையும் குடும்பங்களையும் பாதுகாக்க முடியும். நவீன யுகத்தில் இணையம் என்பது ஆற்றல் மிக்கது அந்த ஆற்றல் ஒருவரைக் காக்கப் பயன்பட வேண்டுமே தவிர, அழிக்கப் பயன்படக் கூடாது.





# காகிதத்தில் அல்ல கல்லிலே பதித்திட்டோம் கண்டீர்

'முதலில் ஒன்றுமே இல்லாமல் தான் இருந்தது. அதிலிருந்துதான் 'இருப்பது' என்பது தொடங்கியது'
இதுவே வேதங்களும் உபநிடதங்களும் சொல்லி முடிக்கிற சாரம்.

இருப்பவை எல்லாவற்றிற்குமான தொடக்கப்புள்ளி ஒரு சூனியப்புள்ளிதான்.

உலகு தோன்றிய காலத்தில் இது எதுவுமே இல்லாமல் இருந்திருக்குமா?
எதுவுமே இல்லாத சூனியம் எப்படியிருந்திருக்கும்?

சூனியமான உலகை கற்பனை செய்து பார்க்க உங்களால் இயலுமா?

உங்கள் கற்பனையில் வரும் உலகில் எந்த ஒரு பொருள் இருந்தாலும் கூட அது சூனியமாகாது.... உதாரணமாக கடல், கல், மண், ஒளி இப்படி எது இருந்தாலும் அது சூனியமல்ல.

இந்து மதத்தின் மூல நூலாக கருதப்படுகிற வேதநூல்கள் இதையே வியந்து பார்க்கிறது.

கடந்தும் உள்ளும் இருக்கின்ற கடவுளை கற்பனையால் காண்பது கூட அசாத்தியம் என்கிறது.

இந்து மதத்திற்கு எதிராக வளர்ந்து நின்ற சமணம், பௌத்தத்தினால் கூட கடவுள் என்ற ஒன்றை காட்சிப்படுத்த முடியவில்லை. ஒன்றுமற்ற சூனியத்தில் இறைவன் இருக்கிறான் என்றே இஸ்லாமும் போதிக்கிறது.

சிற்றம்பலம் என்கிற சிதம்பரத்தின் இரகசியம் 'அம்பலம்' என்கிற ஒன்றுமற்ற வெட்ட வெளியையே காட்டுகிறது.

தீபத்தில் ஏற்றும் சுடர் எங்கிருந்து வருகிறது? தீபத்தை அணைக்கும் போது அந்தச்சுடர் எங்கு செல்கிறது?

உடல் எரிகிற போது ஆத்மா எங்கு செல்கிறது? எரிகிற உடல் எங்கு செல்கிறது? எல்லாம் சூனியத்திலிருந்து தொடங்கி சூனியத்திலே முடிகிறது.

ஒரு பிரபஞ்சத்தையே கற்பனை செய்து பார்க்க வல்ல எங்கள் கற்பனைத்திறத்தால் கூட ஒரு சூனியத்தை கற்பனை செய்து பார்க்க முடியாதது ஏன்?

உண்மையில் தொடக்கத்தில் ஒன்றுமே இல்லாமல் இருந்திருக்குமா? அல்லது இருந்தவைகள் அறியப்படாமல் இருந்திருக்குமா?

ஒரு பொருள் இல்லை என்று சொல்வதும் அது அறியப்படாமல் இருப்பதும் ஒன்றல்ல.

ஒவ்வொன்றாக மனிதன் உலகை அறிந்து கொள்ள தொடங்கினான். அவன் அறிவுப்புலத்திற்குள் உலகம் உள்வாங்கப்பட்ட போதுதான் சூனியமான உலகம் இருப்பவைகளால் நிரம்ப தொடங்கியது.

தனக்கு அறிவு என்ற ஒன்று இருப்பதை ஏதோ ஒரு புள்ளியில் உணர்ந்து கொள்ளத் தொடங்கினான்.

கோமோ சேப்பியன்ஸ் என்று வரலாற்று ஆய்வுகள் சொல்கிற மனிதனும் அறிவுள்ள மனிதனின் ஆரம்பத்தையே சொல்கிறது.

இவ் ஆய்வுகளை எல்லாம் தாண்டி பலகோடி ஆண்டுகள் முன்னிருந்து வந்த ஒரு வாழ்க்கைமுறை - தர்மநெறி.. இன்று இந்து மதமாக சொல்லப்படுகிற அந்நெறியின் புராணங்களில் மனித குலம் தோன்றி வந்த விதம் குறித்து எத்தனையோ ஆயிரம் கதைகள் உள்ளன. எல்லாம் உண்மையா என்றால்...

இல்லை... தெரியாது. ஆனால் எல்லாம் பொய்யா என்றால்... அதுவும் இல்லைதானே.. எங்கோ ஒளிந்துள்ள சில உண்மைகள் தானே கால ஓட்டத்தில் இத்தனை கதை வடிவங்களாய் உருவெடுத்து நிற்கின்றன.

மனித குலம் தோன்றிய காலத்திலிருந்து தோன்றி மறைந்த எத்தனையோ உயிரினங்களையும், மனுட வர்க்கங்களையும் உயிரோட்டத்தோடு இன்றும் நாம் காணக்கூடிய ஓர் இடம் என்றால் அது ஆலயங்கள் தான்.

இந்த நவீன யுகத்தில் மனிதர்களை - நிகழ்வுகளை பதிவு செய்ய எத்தனையோ கருவிகளையும் வழிமுறைகளையும் வகுத்து வைத்துள்ளோம். ஆனால் இக்கருவிகளினதும், முறைகளினதும் நிச்சயத்தன்மை , நீடித்த தன்மை பற்றி என்ன கூற முடியும்..

பதிவு செய்தவற்றை எம் ஆயுட்காலம் வரையாவது காப்பதே மிகப்பெரிய விடயமாகவுள்ளது. ஆனால் ஆயிரம் ஆண்டுகளிற்கும் மேலாக அழியாத வகையில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், உயிரோட்டத்தோடு காட்சிதந்து எம்மை அன்றைய யுகத்திற்கு அழைத்துச் செல்கின்றன அல்லவா? ஆலயங்களில் காணப்படும் சிற்பங்கள் சொல்லும் கதைகள் தான் எம் வரலாற்றினதும், தத்துவங்களினதும் அருங்களஞ்சியமாகும்.

இந்து தொன்மவியலில் மனித இனக்குழுக்கள் பதினெட்டு வகையினராக காணப்படு கின்றனர். கணங்கள் என்றழைக்கப்படுவது இதனையே.. இவ் அத்தனை கணங்களின் அதிபதியாக இருப்பதாலே ‘கணபதி’ என்கிற பெயர் முதற் கடவுளிற்கு உருவானது.



அபிதான சிந்தாமணி எனும் தமிழ் கலைக்களஞ்சியத்தில் இத்தகைய பதினெட்டு கணங்களை பற்றி பட்டியலிடப்பட்டுள்ளது.

அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், கந்தர்வர், இயக்கர் (யக்ஷர்), விஞ்ஞையர் (வித்யாதரர்), பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர் ஆகியனவே இப்பதினெட்டு கணங்களாகும். சிலர் பூலோக வாசிகள் சிலர் மேல் லோக வாசிகள். சிலர் காற்றில் சஞ்சரிப்போர்.

ஒவ்வொரு கண மனிதர்களும் , உயிரினங்களும் வித்தியாசமானவைகள். இக்கால பார்வையில் இந்த உயர்திணை அஃறிணை கலப்பு விசித்திரமானது. இந்த பூமியில் நாம் வாழ்நாள் என்பது அதிகபட்சம் நூறு வருடங்களே. இக்காலத்திற்குள் எந்த ஒரு உயிரினங்களினதும் பரிணாம வளர்ச்சியை காண்பது என்பது சாத்தியமற்றது.

ஆனால் இத்தகைய படிநிலைகள் பரிணாம வளர்ச்சியில் இருந்திருக்கக்கூடும் என்று ஆலய சிற்பங்களை உற்று நோக்கினால் ஊகிக்கலாம்.

சிங்க முகமும் மனித உடலும் கொண்டவர்கள் கிம்புருடர்கள் இடுப்பிற்கு கீழ் பறவை உருவமும், இடுப்பிற்கு மேல் மனித உருவமும் கொண்ட ஆண் மற்றும் பெண் பாலினத்தவர்கள் கின்னரர் என்பவர்கள். இவர்களைப் பற்றிய குறிப்புகள் பௌத்த சமயத்திலும் உண்டு. கின்னரர்கள் ஆடற்கலையில் வல்லவர்கள். பௌத்த வழிபாட்டுத் தலங்களில் கூட கின்னரர்களின் உருவச்சிலைகளும், புடைப்புச் சிற்பங்களும், ஓவியங்களும் காணப்படுகின்றன.

தேவர்கள் தேவலோகத்தில் வசிக்கின்றார்கள். தேவலோகத்தில் தேவமங்கைகளின் நடனங்களை கண்டபடியும், சோமபானம் முதலிய பானங்களை அருந்தி மகிழ்வதாகவும் நம்பப்படுகிறது.

சித்தர்கள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டு வகையான யோகாங்கம் மூலம் எண் பெருஞ் சித்திகளைப் பெற்றவர்கள் ஆவர்."சித்தர்" என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர் என்பது பொருள்.

சிவபெருமானுடைய சேவர்களாக கயிலை மலையில் இருப்பதாக சித்தரிக்கப்படுகிறார்கள் பூத கணங்கள். பூதகணங்கள் சிவபெருமானின் பல்வேறு வடிவங்களோடு இணைந்து வருகிறது. சிவாலயங்களில் பூத கணங்கள் தனி வரிசையாக செதுக்கப்படுகின்றன. அவ்வாறு செதுக்கப்படும் பூத கணங்கள் குறும்பு செய்பவைகளாகவும், இசை கருவிகளை வாசித்து, நடனமாடுபவைகளாகவும் உள்ளன. சில சிவாலயங்களில் பூதங்கள் திருச்சுற்று சுவரின் மீது அமைக்கப்படுகின்றன.

அத்தகைய பூதகணம் ஒன்றே இதழின் முதற்படமாக இம்முறை பிரசுரமாயுள்ளது. இத்தகைய பதினெட்டு கணங்களில் உள்ள அனைவரையும் ஆலய சிற்பங்களில் இன்றளவும் காண்கிறோம். இனி வருவோரும் காணலாம்..

வரலாற்று ஆய்வுகள் தொடங்குவதற்கு முற்பட்ட காலத்திலே இத்தகைய பதிவுகளை கல்லிலே செதுக்கி வைத்துள்ளனர் முன் வாழ்ந்தோர்..




வெறும் காகிதத்தில் பதிவு செய்யவில்லை என்று எம் உண்மைகளை ஏற்க மறுக்கும் மேற்குலகம் இதை எப்படி புரிந்து கொள்ளும்? இவை யாவும் உண்மையாக இருந்தாலும் ஆச்சரியம்தான். கற்பனையாக இருந்தாலும் ஆச்சரியம்தான்.

# இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நினைவுப் பேருரை சிறப்பாக நடைபெற்றது



சைவத்தமிழ் உலகிற்கு ஈடு இணையற்ற தொண்டாற்றி இறைபதம் அடைந்த அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் ஒப்பற்ற சேவைகளைக் கௌரவிக்கும் விசேட நினைவேந்தல் நிகழ்வு, நல்லூர் அகில இலங்கை இந்து மாமன்ற பிராந்திய அலுவலகத்தில் மிகச்சிறப்பாக கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



இந்நாளில் அமரரின் சமய, சமூக மற்றும் கல்விப்பணிகள் குறித்த அரிய வரலாற்றுத் தகவல்கள் பலராலும் நன்றியுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டன. மலேசியாவில் 1947 ஆம் ஆண்டு பிறந்து உடுப்பிட்டியில் வசித்து, யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், 1969 இல் சட்டத்தரணியாகத் தனது பணியை ஆரம்பித்தார். சிறந்த சட்டப் புலமையும் சமய அறிவும் கொண்ட இவர், தனது வாழ்நாள் முழுவதும் இந்து ஆலயங்களின் பாதுகாப்பு, கல்வி மேம்பாடு மற்றும் சமூக நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்தார். குறிப்பாக, மூடப்பட்டிருந்த கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியை மீண்டும் இயங்கச் செய்ததிலும், அங்கு தங்கிப் பயிலும் வசதியற்ற மாணவர்களுக்காக “சக்தி இல்லம்” விடுதியை உருவாக்கியதிலும் இவருக்கு முக்கிய பங்குண்டு.



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச்செயலாளர், தலைவர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்த இவரது காலத்தில், மாமன்றத்திற்கான பிரதான கட்டடம் கொழும்பில் நிறுவப்பட்டதுடன், யாழ்ப்பாணம்






நல்லூர் கிளை அலுவலகம் மற்றும் முறிகண்டியில் “சரவணப் பொய்கை“ கட்டடம் என்பனவும் உருவாக்கப்பட்டன. திருக்கேதீச்சர திருப்பணிச்சபைத் தலைவராக இருந்து, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சுமார் 360 மில்லியன் ரூபா செலவில் ஆலயத் திருப்பணிகளை முன்னெடுத்தமை இவரது பாரிய சாதனைகளில் ஒன்றாகும். அத்துடன், உயர்தர மாணவர்களுக்கான இந்து நாகரிகப் பாடநூல் வெளியீடு மற்றும் போர்ச்சூழலால் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள் என இவரது கல்விப்பணி விரிந்து நின்றது.














அன்றைய நிகழ்வில் புகழ்பெற்ற சட்டத்தரணிகளான திரு. ஜோ. சிவராமசர்மா மற்றும் கலாநிதி கு. குருபரன் ஆகியோர் கலந்துகொண்டு, இந்து ஆலயங்களைப் பரிபாலனம் செய்வதில் எழுந்துள்ள சட்டச் சிக்கல்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் நுணுக்கங்கள் குறித்துக் காத்திரமான கருத்துரைகளை வழங்கினர்.

2018 ஆம் ஆண்டு தனது 71 ஆவது வயதில் இறைபதம் எய்திய அமரர் நீலகண்டன் அவர்களின் நினைவைப் போற்றும் இவ்விழாவில், சட்டக் கல்லூரி மாணவர்கள், ஆலயத் தர்மகத்தாக்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# இளம் மனங்களின் மௌனப் போராட்டம்

வடிவேல் ரவினா
3 ம் வருட புவியியற் துறை மாணவி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இன்றைய உலகம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. தொழில்நுட்ப முன்னேற்றம், உலகமயமாக்கல், போட்டித் தன்மை, பொருளாதார அழுத்தங்கள், சமூக எதிர்பார்ப்புகள் ஆகியவை மனித வாழ்வை புதிய பாதைகளில் இட்டுச் செல்கின்றன. இந்த மாற்றங்களின் மையத்தில் நிற்பவர்கள் இளைஞர்கள். அவர்கள் நாட்டின் எதிர்காலம், சமூகத்தின் நம்பிக்கை, குடும்பத்தின் கனவு. ஆனால் இந்த எதிர்கால நம்பிக்கைகளின் பின்னால், பெரும்பாலும் வெளிப்படாமல் மறைந்து கிடப்பது “இளம் மனங்களின் மௌனப் போராட்டம்” ஆகும்.

இளம் மனங்கள் வெளியில் சிரித்தாலும் உள்ளுக்குள் சுமக்கும் சுமைகள் எண்ணிலடங்கா. கல்வியில் சாதிக்க வேண்டும், குடும்பத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும், நல்ல தொழிலைப் பெற வேண்டும், சமூகத்தில் மதிப்பு பெற வேண்டும் என்ற எண்ணங்கள் அவர்களை தொடர்ந்து துரத்துகின்றன. இவ்வாறு உருவாகும் மனஅழுத்தம், பலரின் வாழ்க்கையில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

ஆனால் அவற்றை வெளிப்படையாகப் பகிர முடியாமல், "நான் சரியாக இருக்கிறேன்" என்ற முகமூடியுடன் அவர்கள் வாழ்கிறார்கள்.

- கல்வி மற்றும் போட்டி அழுத்தம்

இன்றைய கல்வி அமைப்பு அறிவைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை மட்டுமல்ல் அது போட்டியின் அரங்காக மாறியுள்ளது. சிறந்த மதிப்பெண்கள், உயர்கல்வி வாய்ப்புகள், வெளிநாட்டு கல்வி கனவுகள்—இவை அனைத்தும் இளைஞர்களின் மனதில் பெரிய இலக்குகளாக பதிந்துள்ளன. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒரே திறன், ஒரே விருப்பம், ஒரே சூழல் இருக்காது. இந்த வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளாமல், ஒப்பீட்டு மனப்பான்மை உருவாக்கப்படும்போது, பல இளம் மனங்கள் தாழ்வு உணர்ச்சியில் சிக்கிக் கொள்கின்றன.

"அவள் முதல் வந்தாள் உன்னால் ஏன் முடியவில்லை?" என்ற ஒரு சாதாரண வாக்கியம் கூட ஒரு இளம் மனதில் ஆழமான காயத்தை ஏற்படுத்தலாம். இந்த ஒப்பீட்டு கலாசாரம், தன்னம்பிக்கையை சிதைக்கிறது. தன் திறமைகளை உணர முடியாமல், பிறருடன் ஒப்பிட்டு தன்னை மதிப்பிடும் நிலை உருவாகிறது. இதுவே மௌனப் போராட்டத்தின் தொடக்கம்.

- வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால அச்சம்

கல்வி முடிந்ததும் வேலைவாய்ப்பு என்பது இன்னொரு பெரிய சவால். வேலைவாய்ப்பு குறைவு, அனுபவம் தேவை என்ற கோரிக்கைகள், குறைந்த சம்பளம், பொருளாதார நெருக்கடி—இவை அனைத்தும் இளைஞர்களின் மனதில் அச்சத்தை உருவாக்குகின்றன. "நான் என் வாழ்க்கையில் நிலைபெறுவேனா?" என்ற கேள்வி பலரின் நெஞ்சில் ஒலிக்கிறது. சிலர் விரும்பாத தொழில்களில் ஈடுபட நேரிடுகிறது. சிலர் தங்களது துறைக்கு முற்றிலும் மாறான துறைகளில் வேலை பார்க்கின்றனர். இந்த உளவியல் முரண்பாடு, அவர்களின் மனநிலையை பாதிக்கிறது. வெளியில் சாதாரணமாகத் தோன்றினாலும், உள்ளுக்குள் அவர்கள் எதிர்கொள்ளும் மனஅழுத்தம் மிகுந்தது.

- குடும்ப மற்றும் சமூக எதிர்பார்ப்புகள்

இளைஞர்கள் தனிப்பட்டவர்களாக மட்டுமல்ல் அவர்கள் குடும்பத்தின் ஒரு அங்கமாகவும் இருக்கிறார்கள். பெற்றோரின் கனவுகள், உறவினர்களின் எதிர்பார்ப்புகள், சமூகத்தின் கருத்துக்கள்-இவை அனைத்தும் அவர்களின் வாழ்க்கை முடிவுகளை பாதிக்கின்றன. சில நேரங்களில், இளைஞர்களின் சொந்த விருப்பங்கள் கூட புறக்கணிக்கப்படுகின்றன.

கலை, விளையாட்டு, தொழில்முனைவு போன்ற துறைகளில் செல்ல விரும்பும் பலர், “அதில் நிலைத்தன்மை இல்லை” என்ற காரணத்தால் தங்கள் கனவுகளை ஒதுக்கி வைக்கின்றனர். இந்த கனவுகள் நிறைவேறாத வேதனை, மனதில் அமைதியாகக் கசிந்து கொண்டே இருக்கும். வெளியில் அவர்கள் சம்மதித்தாலும், உள்ளுக்குள் அந்த இழப்பு ஒரு மௌனப் போராட்டமாகவே மாறுகிறது.

- சமூக ஊடகங்களின் தாக்கம்

இன்றைய இளம் தலைமுறை சமூக ஊடகங்களுடன் இணைந்தே வாழ்கிறது. Instagram> Facebook> TikTok போன்ற தளங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிட்டன. ஆனால் இந்த தளங்களில் காணப்படும் “பூரணமான வாழ்க்கை” காட்சிகள், பல இளைஞர்களின் மனநிலையை பாதிக்கின்றன. பிறரின் சாதனைகள், அழகு, செல்வம், பயணங்கள் ஆகியவற்றைப் பார்த்து தங்களை ஒப்பிடும் நிலை உருவாகிறது.

சமூக ஊடகங்களில் கிடைக்கும் அங்கீகாரம்—like> comment> share—இவை அனைத்தும் ஒரு அளவுகோலாக மாறும்போது, தன்னம்பிக்கை அதனுடன் இணைக்கப்படுகிறது. ஒரு பதிவுக்கு குறைவான விருப்பங்கள்(Likes) வந்தால்கூட மனவருத்தம் ஏற்படுகிறது. இவ்வாறு வெளிப்படையாகத் தெரியாத மனஅழுத்தம், இளம் மனங்களில் அமைதியான போராட்டத்தை உருவாக்குகிறது.

- உளநலப் பிரச்சினைகள் மற்றும் மௌனம்

மனஅழுத்தம், பதட்டம், மனச்சோர்வு போன்ற உளநலப் பிரச்சினைகள் இன்றைய இளைஞர்களிடையே அதிகரித்து வருகின்றன. ஆனால் இதைப் பற்றி திறந்தவெளியில் பேசும் சூழல் இன்னும் முழுமையாக உருவாகவில்லை. “நான் பலவீனமாகத் தோன்றக்கூடாது” என்ற எண்ணம், உதவி கேட்கும் வாய்ப்பை தடுக்கிறது. உளநல ஆலோசனை பெறுவது குறித்து இன்னும் சில சமூகங்களில் தவறான புரிதல்கள் உள்ளன. இதனால் பல இளைஞர்கள் தங்கள் மன வேதனையை யாரிடமும் பகிராமல் தாங்களே சுமக்கின்றனர். இந்த மௌனம், சில நேரங்களில் ஆபத்தான முடிவுகளுக்கு வழிவகுக்கிறது.

- அடையாள தேடல் மற்றும் உள்ளார்ந்த குழப்பம்

இளமை என்பது அடையாளம் உருவாகும் காலம். “நான் யார்?”, “என் வாழ்க்கையின் நோக்கம் என்ன?”, “எனக்கு உண்மையில் என்ன வேண்டும்?” போன்ற கேள்விகள் இந்த வயதில் இயல்பானவை. ஆனால் சரியான வழிகாட்டுதல் இல்லையெனில், இந்த கேள்விகள் குழப்பமாக மாறுகின்றன. சிலர் தங்கள் மதிப்புகள் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு இடையில் சிக்கிக் கொள்கிறார்கள். சிலர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் உள்ளுக்குள் அடக்கிக் கொள்கிறார்கள். இந்த உள்ளார்ந்த குழப்பம், மௌனப் போராட்டத்தை தீவிரப்படுத்துகிறது.

- பாலினம் மற்றும் சமத்துவ சவால்கள்

இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவரும் தனித்தனியான சவால்களை எதிர்கொள்கிறார்கள். பெண்களுக்கு பாதுகாப்பு, திருமண அழுத்தம், தொழில்—குடும்ப சமநிலை போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. ஆண்களுக்கு “வலிமையாக இருக்க வேண்டும்”, “அழக்கூடாது” போன்ற சமூகக் கட்டுப்பாடுகள் மனஅழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு பாலின அடிப்படையிலான எதிர்பார்ப்புகள், உணர்வுகளை அடக்கி வைக்கச் செய்கின்றன.

- மௌனத்தை உடைக்கும் வழிகள்

இளம் மனங்களின் மௌனப் போராட்டத்தை சமாளிக்க, சமூகமெங்கும் மாற்றம் தேவை. முதலில், குடும்பத்தில் திறந்த உரையாடல் முக்கியம். பெற்றோர் குழந்தைகளின் உணர்வுகளை கவனமாகக் கேட்க வேண்டும். மதிப்பெண்களை விட மனநிலைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கல்வி அமைப்பில் உளநலக் கல்வி சேர்க்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு மனஅழுத்தத்தை கையாளும் திறன்கள் கற்பிக்கப்பட வேண்டும். பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆலோசனை மையங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். சமூக ஊடகங்களை பொறுப்புடன் பயன்படுத்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். “ஒப்பீடு அல்ல, முன்னேற்றம்” என்ற எண்ணம் ஊக்குவிக்கப்பட வேண்டும். தன்னம்பிக்கை, தன்னிலை மதிப்பு ஆகியவை வளர்க்கப்பட வேண்டும். மேலும், இளைஞர்களுக்கு தங்கள் கனவுகளைத் தேர்வு செய்யும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டும். தோல்வி என்பது முடிவு அல்ல் அது ஒரு புதிய தொடக்கம் என்பதை உணர்த்த வேண்டும்.


- இளைஞர் களின் வலிமை

இளம் மனங்கள் பலவீனமானவை அல்ல் அவை மிகுந்த திறன் கொண்டவை. சரியான வழிகாட்டுதல், ஆதரவு, புரிதல் கிடைத்தால், அவர்கள் சமூகத்தை மாற்றும் சக்தியாக மாறுவர். பல இளைஞர்கள் சமூக சேவையில் ஈடுபடுகின்றனர், புதுமையான தொழில்முனைவுகளை தொடங்குகின்றனர், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்னிலை வகிக்கின்றனர். இவை அனைத்தும் அவர்களின் உள்ளார்ந்த வலிமையை காட்டுகின்றன. அவர்களின் மௌனப் போராட்டத்தை புரிந்து கொள்ளும் சமூகமே அவர்களை முன்னேற்றம் நோக்கி இட்டுச் செல்லும். "நீ ஒருவன் அல்ல் நாங்கள் உன்னுடன் இருக்கிறோம்" என்ற உணர்வு, ஒரு இளம் மனத்திற்கு மிகப்பெரிய ஆறுதலாக இருக்கும்.

இளம் மனங்களின் மௌனப் போராட்டம் என்பது கண்களுக்கு தெரியாத ஒரு சுமை. அது மதிப்பெண்களில் அளவிடப் படாது அது சம்பளத்தில் கணக்கிட்படாது. அது அவர்களின் உள்ளார்ந்த உணர்வு களில் பதிந்திருக்கும் ஒரு அமைதியான குரல். அந்தக் குரலை நாம் கேட்க வேண்டும். இளைஞர்களை குறை கூறாமல், அவர்களைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவர்களின் கனவுகளுக்கு ஆதரவளிக்க வேண்டும். அவர்களின் தோல்விகளில் துணையாக நிற்க வேண்டும். அப்போதுதான் இந்த மௌனப் போராட்டம் வெற்றிக் குரலாக மாறும். இளம் மனங்கள் மலர்கள் போன்றவை. அவற்றை அழுத்தாமல், அன்புடன் பராமரித்தால், அவை மணம் வீசி உலகை அழகாக்கும். அந்த அழகான நாளை உருவாக்குவது நம்முடைய பொறுப்பு.



# ஐம்பெருங்காப்பியங்கள் சூடிய தமிழ்த்தாய்




தமிழ்மொழி வெறும் பேச்சுக்கான கருவி மட்டுமல்ல் அது ஒரு பண்பாட்டுப் பேழை, கலைகளின் உறைவிடம். அன்னைத் தமிழை ஒரு உருவகமாகப் பார்க்கும்போது, அவள் வெறும் சிலையாகத் தெரிவதில்லை. காலத்தால் அழியாத காப்பியங்களை அணிகலன்களாகத் தரித்து நிற்கும் ஒரு பேரழகியாகவே நம் முன்னோர் அவளைக் காண்கின்றனர். ஐம்பெருங்காப்பியங்கள் என்று போற்றப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி மற்றும் குண்டலகேசி ஆகிய ஐந்தும் தமிழ்த்தாயின் உடலோடு பின்னிப் பிணைந்துள்ள உயரிய அடையாளங்கள்.

அன்னைத் தமிழின் அடித்தளமாக, அவளது திருப்பாதங்களை அலங்கரிப்பது இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகாரம். கண்ணகியின் நீதிக்காக எழுந்த அந்தச் சிலம்பின் குரல், தமிழின் முதல் காப்பியம் என்ற பெருமையுடன் அவளது பாதங்களுக்குப் பெருமை சேர்க்கிறது. ஒரு காப்பியமே காலணியாக மாறித் தமிழின் நடையை உறுதிப்படுத்துவது உலக இலக்கியங்களில் காணக் கிடைக்காத அதிசயம்.




தமிழ்த்தாயின் கைகளைச் சிங்காரிப்பவை வளையாபதி எனும் காப்பியம். பெண்ணின் கைகளுக்கு வளையல்கள் எப்படி அழகைத் தருகின்றனவோ, அப்படியே வளையாபதி தமிழின் இலக்கியப் பரப்புக்கு வனப்பைத் தருகிறது. இன்று முழுமையாகக் கிடைக்காத போதிலும், அதன் எஞ்சிய பாடல்கள் தமிழின் ஆபரணமாகத் திகழ்கின்றன.

அதேபோல், அவளது காதுகளில் அறிவின் சுடராகத் தொங்குவது குண்டலகேசி. நாகுத்தனாரால் இயற்றப்பட்ட இந்நூல், தர்க்க ரீதியான விவாதங்களையும் அறிவார்ந்த சிந்தனைகளையும் தமிழ்த்தாயின் செவிகளுக்கு அணிகலனாகச் சூட்டியுள்ளது.

தமிழ்த்தாயின் கருணைக்குச் சான்றாக அவளது திருக்கைகளில் ஏந்தியிருப்பது மணிமேகலை எனும் அட்சய பாத்திரம். பசிப்பிணி போக்கும் அறத்தின் அடையாளமான மணிமேகலா தெய்வம் அளித்த அந்தப் பாத்திரம், தமிழினம் காலங்காலமாகப் போற்றி வரும் ஈகைக் குணத்தைக் குறிக்கிறது. சீத்தலைச் சாத்தனாரின் இந்த அறம் சார்ந்த காப்பியம் தமிழ்த்தாயின் மேன்மைக்கு மகுடம் வைக்கிறது.

இறுதியாக, அவளது திருமுடியில் ஒளிவீசும் சிந்தாமணியாகத் திகழ்வது திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணி. செல்வம், காதல், துறவு என வாழ்வின் அனைத்து நிலைகளையும் நுட்பமாகப் பேசும் இந்நூல், தமிழ்த்தாயின் தலையில் சூட்டிய மணிமுடியாகத் திகழ்கிறது.

இவ்வாறு பாதத்தில் சிலம்பும், கையில் வளையலும், காதில் குண்டலமும், கையில் அட்சய பாத்திரமும், தலையில் சிந்தாமணியும் தரித்து நிற்கும் தமிழ்த்தாய், உலக மொழிகளுக்கு எல்லாம் தாயாகத் திகழ்கிறாள். இந்த ஐம்பெருங்காப்பியங்களும் வெறும் நூல்கள் அல்ல் அவை தமிழின் உயிர்நாடி. இவற்றைப் போற்றுவதும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.



# பல்கலைக்கழக கல்வி: இலவசம் எனப்படும் விலை உயர்ந்த கனவு

சிவகுமார் ஜதுஷிகா
3ம் வருட உளவியற்த்துறை (சிறப்பு கற்கை) மாணவி
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கை சமூகத்தில் பெருமையாகப் பேசப்படும் சொற்களில் ஒன்றாக “இலவசக் கல்வி” என்ற கருத்து நீண்ட காலமாக நிலவி வருகிறது. பாடசாலை கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை கட்டணமின்றி வழங்கப்படும் கல்வி அமைப்பு, சமூக சமத்துவத்திற்கான அடையாளமாக அரசியல் மேடைகளிலும் கொள்கை உரைகளிலும் முன்வைக்கப்படுகிறது. ஆனால் இன்றைய பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்க்கையை நெருக்கமாகப் பார்க்கும் போது, இந்த “இலவசக் கல்வி” உண்மையில் எவ்வளவு இலவசமாக உள்ளது என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது. கல்விக்காக நேரடியாக கட்டணம் வசூலிக்கப்படவில்லை என்றாலும், கல்வியைப் பெறும் முழுப் பயணத்திலும் மாணவர்கள் எதிர்கொள்ளும் செலவுகள், அவர்களை கடுமையான பொருளாதார அழுத்தத்துக்குள் தள்ளி வருகிறது.

ஒரு மாணவரின் பல்கலைக்கழகப் பயணம், பல்கலைக்கழக வாசலுக்குள் நுழையும் நாளில் தொடங்குவதில்லை. அது அதற்கு முன்பே, உயர்தரப் பரீட்சை காலத்திலேயே ஆரம்பமாகிவிடுகிறது.

இன்றைய கல்வி சூழலில், பல்கலைக்கழகத் தகுதி பெறுவது கடும் போட்டி நிறைந்த ஒன்றாக மாறியுள்ளது. அரசுப் பாடசாலைகளில் கல்வி பெற்ற மாணவர்களுக்கே கூட, தனியார் வகுப்புகள் இன்றி வெற்றிபெறுவது கடினமான நிலையாக உள்ளது. பல சமூக ஆய்வுகள் கூறுவதாவது, ஒரு சராசரி மாணவர் உயர்தரப் பரீட்சைக்காக மாதத்திற்கு 20,000 முதல் 40,000 ரூபாய் வரை செலவிடுகிறார். கிராமப்புற மற்றும் குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு இந்தச் செலவு பெரும் சுமையாக மாறுகிறது. பல குடும்பங்கள் கடன் எடுத்து, சேமிப்புகளைச் செலவழித்து, ஒரே ஒரு நோக்கத்திற்காக "மகன் அல்லது மகள் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வேண்டும்" என்ற கனவுக்காக இந்தச் செலவுகளைச் சந்திக்கின்றன.

இந்த நீண்ட பொருளாதார போராட்டத்துக்குப் பின் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்ததும் மாணவர்களின் சுமை குறையும் என்று பலர் நம்புகிறார்கள். ஆனால் உண்மை அதற்கு முற்றிலும் மாறானதாக இருக்கிறது. பல்கலைக்கழகத்தில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே செலவுகள் புதிய வடிவத்தில் தொடங்குகின்றன. மாணவர்கள் எதிர்கொள்ளும் முதல் மற்றும் மிகப் பெரிய சவால் தங்குமிடம் தொடர்பானதாகும். இலங்கை பல்கலைக்கழகங்களில் மாணவர் எண்ணிக்கையை ஒப்பிட்டால், விடுதிகள் மிகவும் குறைவாக உள்ளன. கிடைக்கக்கூடிய விடுதிகளும் பெரும்பாலும் ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. இதன் விளைவாக, மூன்றாம் ஆண்டு முதல் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே தனியார் வீடுகள் அல்லது வெளி விடுதிகளில் தங்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இன்றைய பொருளாதார சூழலில், பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள நகரங்கள் மற்றும் பட்டணங்களில் ஒரு சிறிய அறைக்கான மாத வாடகை 5,000 முதல் 15,000 ரூபாய் வரை உள்ளது. சில பல்கலைக்கழகப் பகுதிகளில் இது 40,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதனுடன் மின்சாரம், நீர், சமையல் எரிவாயு, இணைய வசதி போன்ற செலவுகளையும் சேர்த்தால், ஒரு மாணவரின் மாதாந்திர தங்குமிடச் செலவு சராசரியாக 25,000 முதல் 45,000 ரூபாய் வரை செல்கிறது. இது குறைந்த வருமானக் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார அழுத்தமாக மாறுகிறது.



தங்குமிடச் செலவுகளுக்கு அடுத்ததாக மாணவர்களை அதிகமாக பாதிப்பது உணவுச் செலவாகும். பல்கலைக்கழக உணவகங்களில் உணவு வழங்கப்பட்டாலும், அதன் தரம், அளவு, நேர ஒழுங்கு போன்ற பிரச்சினைகள் காரணமாக மாணவர்கள் வெளியே உணவு வாங்க வேண்டிய நிலை அடிக்கடி உருவாகிறது. ஒரு நாளுக்கான உணவுச் செலவு சராசரியாக 700 முதல் 1,200 ரூபாய் வரை செல்கிறது. இதன் அடிப்படையில், ஒரு மாணவர் மாதத்திற்கு 20,000 முதல் 30,000 ரூபாய் வரை உணவுக்காகச் செலவிட வேண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடி, விலை ஏற்றம், எரிபொருள் செலவுகள் ஆகியவை இந்தச் செலவுகளை தொடர்ந்து உயர்த்தி வருகின்றன. உணவு என்பது அடிப்படை மனிதத் தேவையாக இருந்தாலும், பல மாணவர்களுக்கு அது தினசரி கவலையாக மாறியுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வி என்பது வகுப்பறைக்குள் நடைபெறும் பாடங்களை மட்டும் கொண்டதல்ல. பாடநூல்கள், குறிப்பேடுகள், அச்சுப் பிரதிகள், ஆய்வுக்கான உபகரணங்கள், கணினி, இணையத் தரவு போன்றவை இன்றைய கல்வியில் தவிர்க்க முடியாத அம்சங்களாக மாறியுள்ளன. குறிப்பாக ஆன்லைன் கற்றல் மற்றும் மின்னணு வளங்கள் அதிகரித்துள்ள சூழலில், கணினி மற்றும் இணைய வசதி இல்லாமல் கல்வியைத் தொடர்வது சாத்தியமற்றதாகிறது. ஒரு சராசரி மாணவர் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 15,000 முதல் 25,000 ரூபாய் வரை கல்வி உபகரணங்களுக்கு செலவிட வேண்டிய நிலை உள்ளது. அறிவியல், தொழில்நுட்ப மற்றும் மருத்துவப் பீடங்களில் பயிலும் மாணவர்களுக்கு இந்தச் செலவு மேலும் அதிகமாகிறது.

இதனுடன் உடை, காலணி, சுகாதாரப் பொருட்கள் போன்ற அடிப்படை வாழ்க்கைச் செலவுகளும் சேர்கின்றன. பல்கலைக்கழக வாழ்க்கை என்பது சமூக உறவுகளால் நிரம்பிய ஒரு கட்டமாக இருப்பதால், முற்றிலும் செலவில்லாமல் வாழ்வது நடைமுறையில் சாத்தியமற்றதாக உள்ளது. மாணவர்கள் தங்கள் தோற்றம், சுகாதாரம், சமூகப் பங்கேற்பு ஆகியவற்றிற்காக குறைந்தபட்ச செலவுகளையாவது மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. பல்கலைக்கழகம் என்பது கல்வி மட்டுமல்ல் அது மாணவர்களின்

முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கான இடமாகவும் பார்க்கப்படுகிறது. கலாச்சார விழாக்கள், விளையாட்டு போட்டிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், சமூக சேவை நடவடிக்கைகள் போன்ற பல இணைப்பாடுவிதான செயல்பாடுகள் பல்கலைக்கழக வாழ்க்கையின் ஒரு பகுதியாக உள்ளன. இந்தச் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கு பதிவு கட்டணம், உடைச் செலவு, பயணச் செலவு, நிகழ்ச்சி ஏற்பாட்டு செலவு எனப் பல வகையான செலவுகள் ஏற்படுகின்றன. இவை மாணவர்களின் அனுபவத்தையும் திறனையும் வளர்க்க உதவினாலும், பொருளாதார காரணங்களால் பல மாணவர்கள் இதில் பங்கேற்க முடியாமல் விலகி நிற்க வேண்டிய நிலை உருவாகிறது. இதனால் பல்கலைக்கழகத்திற்குள் கூட பொருளாதார அடிப்படையிலான மறைமுகமான வேறுபாடுகள் உருவாகுகின்றன. இந்த அனைத்து செலவுகளுக்கிடையில், குறைந்த வருமானக் குடும்ப மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் மகா பொல மற்றும் பேசரி போன்ற உயர்கல்வி உதவித் தொகைகள் ஒரு முக்கிய ஆதரவாகக் கருதப்படுகின்றன. ஆனால் தற்போதைய நிலையில், இந்த உதவித் தொகைகள் மாதத்திற்கு சுமார் 6500 முதல் 7500 ரூபாய் அளவிலேயே வழங்கப்படுகின்றன.

இன்றைய வாழ்க்கைச் செலவுகளை ஒப்பிட்டால், இந்தத் தொகை ஒரு மாணவனின் மாதச் செலவுகளில் மிகச் சிறிய பகுதியையே ஈடு செய்கிறது. தங்குமிடம், உணவு, கல்வி உபகரணங்கள் ஆகியவற்றுக்கான செலவுகளை மட்டும் எடுத்தாலும், ஒரு மாணவரின் மாதாந்திர சராசரி செலவு 60,000 ரூபாயைத் தாண்டுகிறது. இத்தகைய சூழலில், மகா போல அல்லது பேசரி போன்ற உதவித் தொகைகள் போதுமானதாக இல்லை என்பதே மாணவர்களின் பொதுவான அனுபவமாக உள்ளது.

பல கல்வியியல் ஆய்வுகள் மற்றும் சமூக ஆராய்ச்சிகள், இந்த பொருளாதார அழுத்தம் மாணவர்களின் மனநலத்திலும் கல்விச் செயல்திறனிலும் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றன. செலவுகளைச் சமாளிக்க பல மாணவர்கள் பகுதி நேர வேலைகளில் ஈடுபடுகின்றனர். இது அவர்களின் படிப்புக்கான நேரத்தை குறைப்பதுடன், உடல் மற்றும் மன அழுத்தத்தையும் அதிகரிக்கிறது. சில மாணவர்கள் கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிலைக்கும், சிலர் பல்கலைக்கழகத்தை முழுமையாக விட்டு விலக வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இலங்கையின் இலவசக் கல்வி கொள்கை உண்மையில் சமூக சமத்துவத்தை உருவாக்க வேண்டுமென்றால், கல்விக் கட்டணத்தை மட்டும் கவனிப்பது போதுமானதல்ல. கல்வியைப் பெறும் முழு செயல்முறையிலும் மாணவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் செலவுகள், தங்குமிடம், உணவு, கல்வி உபகரணங்கள், சமூகச் செயல்பாடுகள் ஆகிய அனைத்தையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். மகாபொல மற்றும் பேசரி போன்ற உதவித் தொகைகள் தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்ப உயர்த்தப்பட வேண்டும். பல்கலைக்கழக விடுதிகள் அனைத்து கல்வியாண்டுகளுக்கும் போதுமான வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான மாற்றங்கள் இல்லையெனில், “இலவசக் கல்வி” என்பது கொள்கை ஆவணங்களிலும் அரசியல் உரைகளிலும் மட்டுமே நிலைத்து, மாணவர்களின் வாழ்க்கையில் அது ஒரு விலை உயர்ந்த கனவாகவே தொடரும். கல்வி உண்மையில் அனைவருக்கும் சம உரிமையாக மாற வேண்டுமென்றால், பல்கலைக்கழக மாணவர்களின் தினசரி வாழ்க்கை யதார்த்தங்களை புரிந்து கொண்டு, அவர்களின் சுமைகளை குறைக்கும் தைரியமான தீர்மானங்களை எடுப்பதே இன்றைய காலத்தின் அவசரத் தேவையாகும்.




அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு



# இணையம்: மானுட உறவுகளின் பாலமா அல்லது விரிசலா?

சீதாராமன் அபிலாசனி
3 ம் வருடம்
புவியியற் சிறப்பு கலை
யாழ் பல்கலைக்கழகம்

மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் சக்கரம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது ‘இணையம்’. கண்ணுக்குத் தெரியாத அலைக்கற்றைகளால் உலகைச் சுருக்கி, உள்ளங்கைக்குள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தொழில்நுட்பம், இன்று ஒரு விவாதப் பொருளாக மாறியுள்ளது. அது மனிதர்களை ஒன்றிணைக்கிறதா? அல்லது அருகிலிருப்பவர்களிடமிருந்து நம்மைப் பிரிக்கிறதா? என்ற கேள்விக்கான விடை, நாம் அதைப் பயன்படுத்தும் விதத்திலேயே ஒளிந்திருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்சமாகத் திகழும் இணையம், மனித சமூகத்திற்குப் பல நன்மைகளைத் தந்துள்ளது: புவியியல் இடைவெளிகளின் வீழ்ச்சி: ஒரு காலத்தில் வெளிநாடுகளுக்குச் சென்ற உறவினர்களின் குரலைக் கேட்க வாரக்கணக்கில் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று, உலகின் எந்த மூலையில் இருந்தாலும் நொடிப்பொழுதில் முகம் பார்த்துப் பேசும் வசதியை இணையம் தந்துள்ளது. இது குடும்பப் பிணைப்பைத் தூரத்தைக் கடந்து நிலைநிறுத்துகிறது.

சிந்தனைப் பரிமாற்றம்: ஒரே மாதிரியான விருப்பங்கள் கொண்ட மனிதர்கள், கண்டம் விட்டு கண்டம் இணையம் வழியாகக் குழுக்களாக இணைந்து புதிய கண்டுபிடிப்புகளையும், கலைகளையும் உருவாக்குகிறார்கள். இது அறிவுசார்ந்த ஒரு புதிய சமூகத்தை ஒன்றிணைக்கிறது. பேரிடர் காலங்களில் கைகொடுக்கும் மனிதாபிமானம்: வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ உலகெங்கிலும் உள்ள மனிதர்களை ஓரணியில் திரட்டுவது இணையமே. இது மனிதநேயத்தை உலகளாவிய ரீதியில் உயிர்ப்புடன் வைத்துள்ளது. திரைகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் தனிமை இணையம் நம்மை உலகத்தோடு இணைப்பதாகத் தோன்றினாலும், தனிமனித வாழ்க்கையில் சில கசப்பான உண்மைகளை விதைத்துள்ளது:

நிஜத்தை மறந்த நிழல் வாழ்க்கை: ஆயிரக்கணக்கான 'ஆன்லைன்' நண்பர்கள் இருந்தாலும், மன அழுத்தத்தில் இருக்கும்போது தோள் கொடுக்க அருகில் ஒருவரும் இல்லாத நிலையை இணையம் உருவாக்கியுள்ளது. முகம் பார்த்துப் பேசுவதை விட, திரையைப் பார்த்துப் பேசுவதையே இன்றைய தலைமுறை விரும்புகிறது. ஒப்பீட்டு மனப்பான்மை: சமூக வலைத்தளங்களில் மற்றவர்கள் பதிவிடும் "மிகப்படுத்தப்பட்ட" மகிழ்ச்சியான படங்களைப் பார்த்து, தன் நிஜ வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பலரும் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இது மனிதர்களிடையே தேவையற்ற தாழ்வு மனப்பான்மையையும் பொறாமையையும் தூண்டி, உறவுகளில் விரிசலை உண்டாக்குகிறது. உணர்ச்சிக் குறைபாடு: ஒரு நேரடிச் சந்திப்பில் வெளிப்படும் அன்பு, கோபம், கண்ணீர் போன்ற உணர்ச்சிகளை ஒருபோதும் 'எமோஜிகள்' (Emojis) ஈடு செய்ய முடியாது. உணர்ச்சிகள் இயந்திரமயமாகிப் போனதால், உறவுகளின் ஆழம் குறைந்து மேலோட்டமானதாக மாறுகிறது.

பிளவுபடுத்தும் சக்தியாக இணையம் இணையம் மக்களைப் பிரிப்பதற்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. தவறான தகவல்கள் (Fake News) பரப்பப்படுவது, சமூகத்தில் குழுக்களுக்கு இடையே பகைமையை உருவாக்குகிறது. கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும்



இணையவழித் தாக்குதல்கள் (Cyber Bullying) மனிதர்களை ஒருவருக்கொருவர் வெறுக்கச் செய்கின்றன. இது சமூகக் கட்டமைப்பையே சிதைக்கும் வல்லமை கொண்டது.

இணையம் என்பது ஒரு கருவி மட்டுமே. அது நம்மை இணைப்பதும் பிரிப்பதும் நம் கைகளில்தான் உள்ளது. கைப்பேசிக்குள் மூழ்கிக் கிடக்கும் நேரத்தைக் குறைத்து, அருகில் இருப்பவர்களின் கண்களைப் பார்த்துப் பேசத் தொடங்குவதே ஆரோக்கியமான தொடக்கம். தொழில்நுட்பத்தை வாழ்க்கைத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்திவிட்டு, உணர்ச்சிகளுக்கும் உறவுகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், இணையம் என்பது ஒரு ‘ஜன்னல்’ போன்றது. அதன் வழியாக உலகைப் பார்ப்பது சிறப்பு ஆனால் அந்த ஜன்னலையே உலகமாக நினைப்பது தவறு. இணையம் தூரத்திலிருப்பவர்களை அருகில் கொண்டு வந்துள்ளது, ஆனால் அருகிலிருப்பவர்களைத் தூரமாக்கிவிடக் கூடாது. தொழில்நுட்பத்தை ஒரு பாலமாகப் பயன்படுத்தி, மனித நேயத்தோடு கைகோப்பதே அறிவுடைமையாகும்.





# ஆரம்பமாகிறது ஐபிஎல் திருவிழா

இந்தியாவில் கோடைக்காலம் என்றாலே கிரிக்கெட் திருவிழாவான இந்தியன் பிரீமியர் லீக் (IPL) தொடர்தான் அனைவரது நினைவிற்கும் வரும். இந்த ஆண்டுக்கான ஐபிஎல் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், நாடு முழுவதும் கிரிக்கெட் ஜுரம் இப்போதே தொற்றிக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஐபிஎல் தொடர் புதிய திருப்பங்களுடன் தொடங்குவது வழக்கம். இந்த ஆண்டும் ஏலத்திற்குப் பிறகு பல அணிகளின் கட்டமைப்பு மாறியுள்ளது. அனுபவம் வாய்ந்த வீரர்களுடன், இளம் வீரர்களின் துடிப்பான ஆட்டமும் இணைந்து ரசிகர்களுக்கு விருந்து படைக்கக் காத்திருக்கிறது. குறிப்பாக, சில அணிகளின் கேப்டன் மாற்றங்கள் அந்த அணிகளின் வியூகங்களில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தியாவின் உள்ளூர் போட்டிகளில் ஜொலிக்கும் இளம் வீரர்களுக்கு ஐபிஎல் ஒரு மிகப்பெரிய ஏணிப்படியாகும். "திறமைக்கான இடம்" (Where talent meets opportunity) என்ற அதன் தாரக மந்திரத்திற்கு ஏற்ப, இந்த ஆண்டும் பல புதிய முகங்கள் சர்வதேச கவனத்தை ஈர்க்க வாய்ப்புள்ளது.



### 1. சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK)



ருதுராஜ் கெய்க்வாட் தலைமையில் சிஎஸ்கே இந்த ஆண்டும் ஒரு சமநிலையான அணியாகத் திகழ்கிறது.

* முக்கிய வீரர்கள்: ருதுராஜ் கெய்க்வாட், எம்.எஸ். தோனி, சஞ்சு சாம்சன் (புதிய வரவு), ஷிவம் துபே, நூர் அகமது, கலீல் அகமது.

* பலம்: சஞ்சு சாம்சன் மற்றும் ருதுராஜ் இணைந்த பலமான டாப்-ஆர்டர். நூர் அகமது மற்றும் ராகுல் சஹார் போன்றோருடன் பலமாக இருக்கும் சுழற்பந்து வீச்சு.

* பலவீனம்: மதீஷா பத்திரனா போன்ற அதிரடி டெத் ஓவர் பந்துவீச்சாளர்கள் இல்லாதது பின்னடைவாக இருக்கலாம். அனுபவம் வாய்ந்த பினிஷர்கள் குறைவாக இருப்பது ஒரு சவாலே.

### 2. மும்பை இந்தியன்ஸ் (MI)



ஹர்திக் பாண்டியா தலைமையிலான மும்பை அணி, மீண்டும் தனது பழைய ஆதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கிறது.

* முக்கிய வீரர்கள்: ரோஹித் சர்மா, சூர்யகுமார் யாதவ், ஜஸ்பிரித் பும்ரா, ஹர்திக் பாண்டியா, டிரெண்ட் போல்ட்.

* பலம்: உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளர் பும்ரா மற்றும் தொடக்கத்திலேயே விக்கெட் வீழ்த்தும் போல்ட் கூட்டணி. அதிரடியான இந்திய பேட்டிங் கோர் (ரோஹித், சூர்யா, திலக் வர்மா).

* பலவீனம்: மிட்செல் சாண்ட்னரைத் தவிர அனுபவம் வாய்ந்த இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் இல்லாதது ஒரு பலவீனமாகத் தெரிகிறது.

### 3. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் (RCB)



நடப்பு சாம்பியனாக களம் இறங்கும் ஆர்சிபி, தனது பட்டத்தைத் தக்கவைக்கத் தயாராக உள்ளது.

* முக்கிய வீரர்கள்: விராட் கோலி, ஃபில் சால்ட், ரஜத் படிதார், ஜித்தேஷ் சர்மா.

* பலம்: கோலி மற்றும் ஃபில் சால்ட் ஜோடியின் அதிரடித் தொடக்கம். ரஜத் படிதார் மற்றும் வெங்கடேஷ் ஐயர் உள்ளிட்ட பலமான மிடில் ஆர்டர்.

* பலவீனம்: ஹேசில்வுட் இல்லாத போட்டிகளில் பந்துவீச்சு சற்று தடுமாற வாய்ப்புள்ளது. குறிப்பாக சின்னசாமி மைதானத்தில் ரன்களைக் கட்டுப்படுத்துவது இவர்களுக்குப் பெரும் சவாலாக இருக்கும்.

### 4. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (KKR)



ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான கொல்கத்தா அணி, தனது சுழற்பந்து வீச்சை முதன்மை ஆயுதமாகக் கொண்டுள்ளது.

* முக்கிய வீரர்கள்: சுனில் நரைன், வருண் சக்கரவர்த்தி, ரிங்கு சிங், கேமரூன் கிரீன், அஜிங்க்யா ரஹானே.

* பலம்: நரைன் - வருண் கூட்டணி எதிரணிகளை நடுத்தர ஓவர்களில் திணறடிக்கும். கேமரூன் கிரீனின் வருகை அணிக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது.

* பலவீனம்: ஹர்ஷித் ராணா மற்றும் ஆகாஷ் தீப் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் காயத்தால் விலகியது அணிக்கு பெரும் பின்னடைவு.

### 5. குஜராத் டைட்டன்ஸ் (GT)

சுப்மன் கில் தலைமையில் குஜராத் அணி ஒரு நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.



* முக்கிய வீரர்கள்: சுப்மன் கில், சாய் சுதர்சன், ஜோஸ் பட்லர், ரஷித் கான், முகமது சிராஜ்.

* பலம்: கில், சாய் சுதர்சன் மற்றும் பட்லர் இணைந்த ஐபிஎல் தொடரின் மிகச்சிறந்த டாப்-ஆர்டர். கானின் ஆல்-ரவுண்ட் பங்களிப்பு.

* பலவீனம்: டாப்-ஆர்டர் சொதப்பினால் மிடில் ஆர்டர் தடுமாறும் அபாயம் உள்ளது. ராகுல் திவேதியா போன்ற வீரர்களின் ஃபார்ம் கவலை அளிக்கிறது.

### 6. ராஜஸ்தான் ராயல்ஸ் (RR)



சஞ்சு சாம்சன் சென்னை அணிக்குச் சென்ற பிறகு, இந்த அணி புதிய தலைமையின் கீழ் (ரியான் பராக்) செயல்படும் சூழலில் உள்ளது.

* முக்கிய வீரர்கள்: யஷஸ்வி ஜெய்ஸ்வால், துருவ் ஜுரல், ரவிச்சந்திரன் அஸ்வின், டிரெண்ட் போல்ட் (திரும்பப் பெறப்பட்டால்), சந்தீப் சர்மா.
*

* பலம்: ஜெய்ஸ்வால் மற்றும் துருவ் ஜுரல் போன்ற அதிரடி இளம் இந்திய வீரர்களின் கூட்டணி. அஸ்வினின் அனுபவம் மற்றும் துல்லியமான பந்துவீச்சு.

* பலவீனம்: சஞ்சு சாம்சன் போன்ற ஒரு கேப்டன் மற்றும் டாப் ஆர்டர் பேட்ஸ்மேன் இல்லாதது பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 7. லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் (LSG)



இந்த அணி தனது ஆல்-ரவுண்டர்களை அதிகம் நம்பியுள்ளது.

* முக்கிய வீரர்கள்: நிக்கோலஸ் பூரன், கே.எல். ராகுல், ரவி பிஷ்னோய், மயங்க் யாதவ், மார்கஸ் ஸ்டோய்னிஸ்.

* பலம்: நிக்கோலஸ் பூரன் மற்றும் ஸ்டோய்னிஸ் போன்ற உலகின் சிறந்த பினிஷர்கள் இருப்பது. மயங்க் யாதவின் அசாத்திய வேகம் எதிரணிகளுக்கு அச்சுறுத்தல்.

* பலவீனம்: கே.எல். ராகுலின் ஸ்டிரைக் ரேட் (Strike Rate) அவ்வப்போது விமர்சனத்திற்கு உள்ளாவது அணியின் வேகத்தைக் குறைக்கலாம்.

### 8. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் (SRH)

கடந்த சீசனில் அதிரடி ஆட்டத்தால் அனைவரையும் மிரட்டிய ஹைதராபாத், இந்த ஆண்டும் அதே பாணியைத் தொடர வாய்ப்புள்ளது.

* முக்கிய வீரர்கள்: இசான் கிசான், டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா, ஹென்றிச் கிளாசன், புவனேஷ்வர் குமார்.

* பலம்: டிராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் சர்மாவின் “பவர் பிளே“ அதிரடி. உலகின் சிறந்த அதிரடி ஆட்டக்காரரான கிளாசன் மிடில் ஆர்டரில் இருப்பது. கிசான் கிசானின் அட்டகாசமான ஆட்டம்
* பலவீனம்: வேகப்பந்து வீச்சில் புவனேஷ்வர் குமாரைத் தவிர மற்றவர்கள் ரன்களை வாரி வழங்குவது இவர்களுக்குப் பலவீனமாக அமையலாம். கம்மின்ஸின் தலைமைத்துவம் இல்லாமல் இருப்பது பலவீனம்.

### 9. டெல்லி கேப்பிடல்ஸ் (DC)

ரிஷப் பண்ட் தலைமையிலான டெல்லி அணி, மீண்டும் ஒரு வலுவான அடையாளத்தைப் பெறப் போராடும்.

* முக்கிய வீரர்கள்: ரிஷப் பண்ட், அக்சர் படேல், குல்தீப் யாதவ், ஜேக் ஃபிரேசர்-மெக்கர்க்.

* பலம்: அக்சர் படேல் மற்றும் குல்தீப் யாதவ் இணைந்த இந்தியாவின் சிறந்த சுழற்பந்து வீச்சு கூட்டணி. மெக்கர்க்கின் அதிரடித் தொடக்கம்.

* பலவீனம்: சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் குறைவாக இருப்பது மற்றும் மிடில் ஆர்டர் பேட்டிங்கில் உள்ள தடுமாற்றம்.

### 10. பஞ்சாப் கிங்ஸ் (PBKS)

ஒவ்வொரு முறையும் புதிய நம்பிக்கையுடன் வரும் பஞ்சாப் அணி, இந்த முறை பிளே-ஆஃப் கனவை நனவாக்கத் துடிக்கிறது.

* முக்கிய வீரர்கள்: அர்ஷ்தீப் சிங், சாம் கரன், லியாம் லிவிங்ஸ்டன், பிரப்சிம்ரன் சிங்.

* பலம்: அர்ஷ்தீப் சிங்கின் டெத் ஓவர் பந்துவீச்சு. ஆல்-ரவுண்டர்களின் பலம் (சாம் கரன், லிவிங்ஸ்டன்).

* பலவீனம்: முக்கியமான தருணங்களில் பதற்றமடைந்து போட்டியை நழுவவிடுவது (Consistency) இந்த அணியின் நீண்டகாலப் பிரச்சனையாக உள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், ஹைதராபாத் மற்றும் மும்பை அணிகள் பேட்டிங்கில் மிகவும் வலிமையாகத் தெரிகின்றன. டெல்லி மற்றும் கொல்கத்தா சுழற்பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது. இந்த முறை ஏலத்தின் தாக்கத்தால் அனைத்து அணிகளுமே சமபலத்துடன் இருப்பதால், ஒவ்வொரு போட்டியும் இறுதிப்போட்டி போல விறுவிறுப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஐபிஎல் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல, அது பலரது உணர்ச்சிகளோடு கலந்த ஒரு கொண்டாட்டமாகும். அடுத்த இரண்டு மாதங்களுக்கு மாலை நேரங்கள் சிக்ஸர்களும் விக்கெட்டுகளுமாக அனல் பறக்கப்போவது உறுதி.

